# **In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 10/2020** **Date:25.02.2026.**

**(DW1)- சாகய ஜஸ்டஸ்**

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. சித்தன் தோப்பு பங்கு பேரவையின் தீர்மாண புத்தகத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் அங்கு இருந்து நான் பணி மாறுதல் அடைந்து விட்டேன் எனவே தாக்கல் செய்ய முடியாது. நான் தற்போது என்ன பதவி வகிக்கிறேன் என்றால் காரங்காடு வட்டார முதன்மை அருட்பணியாளர் மற்றும் இலந்தவிளை பங்கு பணியாளர். சித்தன் தோப்பு தேவாலயம் காரங்காடு வட்டார பங்கு பேரவையின் ஒரு அங்கம் என்றால் சரிதான். தற்போது உள்ள சித்தன்தோப்பு ஆலயத்தின் அருட்பணியாளர் ஏதேனும் தவறு செய்தால் அதற்கு வட்டார முதன்மை அருட்பணியாளர் என்ற முறையில் நான் பொறுப்பேற்க முடியாது என்றால் சரிதான், ஆனால் ஆயரிடம் தகவல் தெரிவிக்கலாம்.

2. நான் நான் சித்தன் தோப்பு ஆலயத்தின் அருட்பாணியாளராக இருந்த காலத்தில் ஏற்பட்ட தாவா பிரச்னைக்கு அப்போது உள்ள வட்டார முதன்மை அருட்பணியாளர் பொறுப்பேற்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான், ஆயரிடம் தகவல் தெரிவிக்க வேண்டும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தை பெற்ற போது நான் மன வேதனை அடைந்தேனா என்றால் மன வேதனை அடையவில்லை. வா.சா.ஆ.1 ஆவணம் குறுக்குல முதல்வர் நான் அதில் குறிப்பிட்டுள்ள காரியத்தை செய்து முடிபேன் என்ற நம்பிக்கையில் அனுப்பினார் என்றால் சரியல்ல, அது பரிந்துரை கடிதம் ஆகும். நான் குழித்துறை மறைமாவட்டத்தின் மூத்த அருட்பணியாளர்கள், பொறுப்பாளர்கள் ஆகியேர்களை மதிப்பதும் இல்லை என்றாலும் அவர்களது அறிவுறையை கேட்பதும் இல்லை என்றாலும் சரியல்ல.

3. மறைமாவாட்டம் சம்பந்தபட்ட வழக்குகளில் பங்கு தந்தையை தனியாக வழக்கு நடத்த அனுமதிப்பது இல்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கை நடத்துவதற்கு அவ்வாறான எந்த அனுமதியும் பெறவில்லை என்றாலும் அதை பெற்றதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, அனுமதி பெற்றுள்ளேன் ஆனால் நீதிமன்றத்தில் அதை தாககல் செய்யவில்லை. நான் அனுமதி பெற்றுள்ள விவரத்தை எனது எதிர் உரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது செய்லபாடு பொது மக்களுக்கும் மறைமாவட்டத்திற்கும் எதிராக இருப்பதால் மறைமாவட்டமே என்னை தனியாக வழக்கு நடத்த விட்டுவிட்டார்கள் என்றால் சரியல்ல.

4. மறைமாவட்டம் இந்த வழக்கை நடத்துவதற்கு எனக்கு தற்போதும் செலவு தொகை கொடுக்கிறார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. மறைமாவட்டத்தில் இருந்து எனக்கு பணம் அனுப்பியதை காட்டக்கூடிய எந்த ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியாது என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணம் படி திருமுழுக்கு நிகழ்வு கொண்டாட்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியின் வீட்டிற்கான திருமுழுக்கு நிகழ்வை எடுத்து நடத்துவது வாதியின் உரிமை என்றால் சரியல்ல, மேற்படி விழாவிற்கான பொருட்களை ஆலயமே கொடுத்து விடும்.

5. மேற்படி நிகழ்விற்கு விருந்து வைப்பது வாதி என்றாலும் மறைமாவட்டமோ ஆலயமோ இல்லை என்றால் சரிதான். தற்போது திருமுழுக்கு நிகழ்வை மேற்கூறியவாறு கொண்டடுவது பொதுவான நிகழ்வு என்றால் வசதி படைத்தோர் விருந்துடன் கொண்டாடுகின்றானர் ஏழைகள் அவ்வாறு கொண்டாடுவது இல்லை. திருமண நிகழ்ச்சியை போல் அழைப்பிதழ் பேரில் பல நபர்களை அழைத்து பெரிய நிகழ்வாக திருமுழுக்கு நடைபெறுகிறது என்றால் சரிதான், ஒரு சிலர் அவ்வாறு நடத்துகின்றனர். அவ்வாறு ஏற்பாடுகள் செய்தும் மேற்படி நிகழ்வு நடைபெறவில்லை என்றால் விழா ஏற்பாட்டாளருக்கு மிகுந்த மன மற்றும் பண கஷ்டம் மற்றும் நஷ்டம் ஏற்படும் என்றால் சரிதான்.

6. வாதி தனக்கு ஏற்பட்ட இழப்பு, கஷ்டம், நஷ்டம் குறித்து கூறி இருக்கும் விவரத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். வாதி நினைத்து இருந்தால் அதிக தொகைக்காக இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கலாம் என்றால் சரியல்ல. சித்தன் தோப்புக்கும் சுங்காண்கடைக்கும் வாதி தனது உறவினர்களை அழைத்து செல்வதற்கே பல ஆயிரம் ரூபாய் செலவு ஆகியிருக்கலாம் என்றால் சரியல்ல சில ஆயிரம் செலவு ஆகியிருக்கலாம். வாதி திருமுழுக்கு விழாவிற்கு யாரையெல்லாம் அழைத்திருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

7. எனது மறைமாவட்டத்திலிருந்து மேற்படி விழாவிற்கு குருகுல முதல்வர் மற்றும் எனது மறைமாவட்டத்தின் பணியாளர்கள் விருந்தினர்களாக சென்றுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் 3 நபர்கள் பணியாட்களாக சென்றார்கள். இந்த விழாவிற்கு ஞானபெற்றோர் பல கிலோ மீட்டர் பயணம் செய்து வந்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஒரு சாதரண மனிதனாக வாதிக்கு தாவா பிரச்னையால் மன கஷ்டம் ஏற்பட்டு இருக்கும் என்றால் சரியல்ல, அவ்வாறு வாதிக்கு கஷ்டம் ஏற்பட்டிருக்காது. மேற்படி பதில் எனது ஆனவத்தையும் வாதி மற்றும் வாதியின் குடும்பத்தார் மீதுள்ள காழ்புணர்ச்சியை காட்டுகிறது என்றால் சரியல்ல.

8. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் குருகுல முதல்வரை எனது தரப்பு

சாட்சியாக விசாரிக்கலாம் என்றால் விசாரிக்கலாம். பொதுவாக ஒரு ஆலயத்தின் திருபலியின் போது அருட்பணியாளர்கள் அல்லது செயலர்கள் முக்கியமான அறிவிப்புகளை அறிப்விப்பார்கள் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பு புத்தகம் யாரால் பராமரிக்கப்படும் என்றால் பங்கு தந்தையால் பராமரிக்கப்படும். மேற்படி அறிவிப்பை புத்தகத்தில் யார் எழுதுவார் என்றால் பங்கு தந்தை எழுதுவார். பங்கு பேரவையின் தீர்மான புத்தகத்தில் தீர்மானங்களை எழுதுவது யார் என்றால் செயலாளர்கள், பங்கு தந்தையின் கண்காணிப்பில் எழுதுவார்கள். தாவா நிகழ்வு நடந்த காலகட்டத்தில் உள்ள பங்கு பேரவையின் தீர்மானம் மற்றும் அறிவிப்பு புத்தகத்தை தாவா பிரச்சனை குறித்தான அறிவிப்பு மற்றும் தீர்மானங்கள் வெளிப்படும் என்றால் சரிதான்.

9. எனது வசிப்பிடம் கண்டன்விளை என்றால் சரிதான். சித்தன் தோப்பு ஆலயத்திற்கு நான் எப்போது செல்வேன் என்றால் ஞாயிறு தவிர்த்து வாரம் ஒரு முறை செல்வேன். நான் ஆலயத்திற்கு செல்லாத காலத்தில் அங்கு நடக்கும் நிகழ்வுகளை குறித்து பதிவேட்டில் பதிவு செய்யமாட்டேன் என்றால் சரியல்ல, கண்டன்விளையில் இருந்து எழுதிக்கொண்டு செல்வேன். அறிவிப்பு புத்தகத்தை நான் எழுதமாட்டேன் என்றாலும் செயலரும் பணியாளர்களும் தான் எழுதுவார்கள் என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு உண்மையானதும் நியாமனாது என்றாலும் நான் தவறு செய்துவிட்டு அதை நியாப்படுத்த வேண்டி பொய் கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**